## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : STC 679/2022**

**Prosecution witness : எ.சா.1** **Date : 10.10.2025.**

| | |
|---|---|
| **Name : புஷ்பா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) எனக்கு எத்தனை வருடத்திற்கு முன்னர் திருமணம் நடந்தது என்றால் 18 வருடத்திற்கு முன்னர் நடந்தது. எனக்கு பூர்வீகம் தமிழ்நாடு இல்லை என்றால் ஆமாம். எனக்கு பெங்களூர் பூர்வீகம் என்றால் ஆமாம். எனக்கும் என் கணவருக்கும் கருத்து வேறுபாடு எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் 2018 ஆகும். 2018ம் ஆண்டிற்கு பிறகு இன்று வரை நான் பெங்களூரில் தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் 2019ல் ஒசூரில் இருந்தேன். அதன் பிறகு 2020 முதல் பெங்களூரில் வாழ்ந்து வருகிறேன். எனக்கு இரண்டு மகள்கள் முறையே கீர்த்தி, பிரீத்தி ஆவார்கள். என் இரு மகள்களும் என்னுடன் பெங்களூரில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். என்னுடைய ஆதார் அடையாள அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் ஒசூரில் உள்ளது. என்னுடைய புகாரில் காட்டப்படும் முகவரியில் தான் ஆதார் அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2) என் முதல் மகள் பெங்களூரில் ஓட்டல் வைத்து நடத்தி வருகிறார் என்றால் இல்லை. இன்ஜினியரிங் படித்து வருகிறார். 9585009999 என்னுடைய செல்போன் எண் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வாடகை ஒப்பந்த பத்திர ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னுடைய மகளுக்காக நான் சாட்சியாக பத்திரத்தில் கையொப்பம் செய்தேனா

என்றால் இல்லை. வழக்கில் உள்ள வங்கி கணக்கை எந்த வருடம் துவங்கினேன் என்றால் 2017 ம் வருடம் துவங்கினேன்.

3) காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த மனுவில் ஒசூர் முகவரி தான் காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். நானும் என் கணவரிடம் சட்டப்படி விவாகரத்து பெற்றேனா என்றால் இல்லை. எந்த காரணமாவது விவாகரத்து பெறாமல் உள்ளதற்கு உள்ளதா என்றால் இல்லை.

4) முதல் விசாரணையில் என் கணவர் காசோலை திருடிச் சென்றது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் பெங்களூரில் உள்ள சோமனஹள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். என் கணவர் காசோலை எடுத்தது குறித்து நான் வங்கிக்கு நிறுத்த அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என்ன காரணம் என்றால் அந்த வங்கி கணக்கை நான் பராமரிப்பது இல்லை.

5) புகாரின் பேரில் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி நான் பின்தொடரவில்லை. நான் வினோத் என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என் செல்போன் வாட்ஸ்அப்பிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்கள் பற்றிய விவரம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. நான் இந்த வழக்கில் பிடியாணையை ரத்து செய்ய எந்த முகவரியை கொடுத்தேன் என்றால் புகாரில் உள்ள முகவரியை தான் கொடுத்தேன்.

6) நான் வங்கி கணக்கில் உள்ள மாதிரி கையொப்பத்தை காசோலையில் உள்ள கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்க அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என் கணவர் காசோலை எடுத்து சென்றது குறித்து நீதிமன்றத்தில் தனிப்புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொன்னவாறு பெங்களூரில் இல்லாத காரணத்தால் தான் அந்த முகவரி குறித்து எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7) பெங்களூரில் உள்ள முகவரி குறித்த விவரத்தை நான் எதிர்வரும் காலத்தில் தர தயாராக உள்ளேன். நான் பெங்களூரில் வாழ்ந்து வர எந்த முகவரியும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்ட புகைப்படம் மற்றும் கூட்டாண்மை களைப்பு பத்திரம் ஆகியவற்றில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) புகார்தாரரிடமிருந்து நான் கடன் பெற்று விட்டு சட்டப்படியான கடனை தீர்ப்பதற்கு கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடனாக எந்த பணமும் பெறவில்லை. நானும் வினோத் என்பவரும் கூட்டாக வாழ்ந்து வந்தோம் என்றும் தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி தீர்க்க வேண்டிய கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. நான் தான் காசோலை கொடுத்து ஏமாற்றினேன் என்றும் எனவே நான் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல.

9) என்னிடம் என் கையொப்பம் காசோலையில் இல்லை என்பதை நிரூபணம் செய்ய வேறு எந்தவித சட்டபூர்வமான ஆவணம் இல்லை என்றால் நான் தேடிப்பார்க்க வேண்டும். என் பெயரில் வேறு வங்கி கணக்கு உள்ளது. எந்த வருடம் கணக்கு துவங்கப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. நான் இந்த வழக்கிலிருந்து தப்பிக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.